பாதிக்கப்படும் என்பதை நானும் புரிந்து கொண்டிருக்கிறேன். ஆகவே, வேறு மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வருகின்ற வகையில், அரசு பரிசீலித்துக் கொண்டு வருகிறது. அந்த வகையிலே அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. ஆர். செங்காளியப்பன் : தலைவர் அவர்களே, அங்கு பக்கத்திலே இருக்கக்கூடிய அதே பகுதியிலே, சக்தி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில், ஏழை எளிய விவசாயிகள், அரிசன விவசாயிகள் வீடு கட்டுவதற்கென, அங்கு அட்வான்ஸ் செய்து, பூமியைக் கையகப்படுத்தியிருக்கிறார்கள். ஆகையினாலே, ஏழை, எளிய மக்களுக்கு, அரசாங்கத்தினுடைய வீடு கட்டும் திட்டத்தை மாற்றி, கூட்டுறவுச் சங்கத்தின்மூலமாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்காகவும் அந்த இடத்திலே இருந்து அந்தத் திட்டத்தை மாற்றி, பக்கத்திலேயிருக்கிற பகுதிகளிலே வானம் பார்த்த பூமியிருக்கிறது; அங்கே மாற்றினால், நமக்குச் சௌகரியமாக இருக்கும்; விவசாயிகள் வரவேற்கிறார்கள். இந்தக் கழிவு நீர் தங்களுக்குத் தேவை என்று வரவேற்கிறார்கள். ஆகவே, அதைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தின் சார்பாக என்னிடத்தில் விண்ணப்பம் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இப்போது வலியுறுத்தி கூறியிருக்கிறார்கள். ஆகவே மாற்றுவதைப்பற்றி அரசு பரிசீலித்து கொண்டிருக்கிறது. அந்த வீடு கட்டும் சங்கம் பாதிக்கப்படாத வகையில் அரசு உரிய ஏற்பாடுகளைச் செய்யும்.

(49) தர்மபுரி மாவட்டத்தில் சில நடுவர் நீதிமன்றங்களில் நடுவர் இல்லாதிருப்பது குறித்து.

திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தர்மபுரி மாவட்டத்திலுள்ள தர்மபுரி, அரூர் மற்றும் ஓசூர் ஆகிய பகுதிகளைச் சார்ந்த நடுவர் நீதிமன்றங்களில் பல மாதங்களாக நடுவர் இல்லாமையால் அப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

(பதில் இல்லை.)